**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF MAGALIR NEETHIMANDRAM,(MAHILA COURT),COIMBATORE

S.C.No.93 of 2018

| | | | |
|---|---|---|---|
| Name of Witness | PW-12-செல்வகுமார் | Caste | |
| Father / Husband Name | | Calling | |
| Village | | Religion | |
| Cell | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.03.2022.

**முதல் விசாரணை-**

நான் குறிச்சியில் வசிக்கிறேன். பூர்விகா மொபைல் கடையில் வேலை செய்கிறேன். ஜெயகாந்தன் என்பவருடன் என் சொந்த வேலையாக கணபதி புதூருக்கு சென்று இருந்தேன், 9 ஆவது தெருவில் கூட்டமாக இருந்தது. போலிசார் இருந்தார்கள். என்ன பிரச்சனை என்று பார்த்தேன். ஒரு பெண் இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலிசார் எங்களிடம் சம்பவ இடத்தில் வரைபடம் வரைந்ததற்காக சாட்சி கையொப்பம்போடுமாறு கேட்டார்கள். முதலில் மறுத்தேன், பிறகு கையொப்பம் செய்தேன். நாங்கள் சொன்னதை டைப் செய்து , பிரிண்ட்டு எடுத்து வந்தார்கள் வந்து எங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள், வரைபடமும் வரைந்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். முதல் கையொப்பம் ஜெயகாந்தன் போட்டார். இரண்டாவது கையொப்பம் நான் போட்டேன். அந்த பார்வை மகசர் **அத.சா.ஆ.9.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை-**

என்ன வேலைக்காக போனேன் என்று போலிசாரிடம் சொல்லவில்லை. கட்சி விஷியமாக அங்கு சென்றுயிருந்தேன். சம்பவ இடத்திற்கு அருகில் பல கடைகள் வீடுகள் உள்ளது குறிப்பிட்டு எங்களை அழைத்து கையொப்பம் வாங்கினார்கள் என்பது சந்தேகமாக உள்ளது என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கே செல்லவில்லை என்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதற்காக கையொப்பம் செய்து விட்டு பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஜெயகாந்தன் அந்த பகுதி ஏ.டீ.ஏம்.கே கட்சியை சேர்ந்தவர். ஜெயகாந்தன் என்னை போன் செய்து வரச்சொன்னார். ஜெயகாந்தன் கேட்டுகொண்டதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அவர்மூலமாக காவல்நிலையத்திற்க்கு சென்று கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை-**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர் இல்லை. இளம் வழக்கறிஞர் ஆஜர். கு.வி.மு.ச. 232 (2) பிரிவின் கீழனா மனு தள்ளபடி செய்யப்பட்டது. குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.